# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆண்டு கார்த்திகை மீ 20 உ வியாழக்கிழமை (06 12 1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 10


# யாழ்ப்பாண மாவட்டத்தில் நூறு பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில்!

## இராணுவத்துக்கு உதவியாக மூன்று தமிழ்க் குழுக்கள்!

லண்டன், டிச. 6

புளொட், ஈ.பி.டி.பி., ரெலோ ஆகிய மூன்று குழுக்களும் இப்போது இராணுவத்துடன் தோளோடு தோள் நின்று விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போர் புரிகின்றன.

— இவ்வாறு பி.பி.ஸி தனது செய்தி விமர்சனத்தில் நேற்றுத் தெரிவித்தது.

பிரஸ்தாப குழுக்களைச் சேர்ந்தவர்கள் மேற்கிலும், கிழக்கிலும் பெரும் எண்ணிக்கையில் இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றனர்.

முன்பு இலங்கை அரசை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளை கட்டுப்படுத்த மத்திய அரசு உதவுமாம்!

### கருணாநிதிக்கு சஹாய் வாக்குறுதி

புதுடில்லி, டிச. 6

இந்திய மண்ணில் தமிழீழ விடுதலைப் புலிகள் எந்தச் செயலையும் மேற்கொள்ளாதிருப்பதை உறுதிப்படுத்த மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்வதற்கு மத்திய அரசு உறுதி கூறியுள்ளது.

இந்த உறுதிமொழியை முதலமைச்சர் கருணாநிதிக்கு மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத் கான் சஹாய் வழங்கியதாக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கருணாநிதி — சஹாய் சந்திப்பின் போது, தமிழகக் கரையோர காவல் பணியை தீவிரப்படுத்துவது என்று

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மாநகரசபை அலுவலகம் மீண்டும் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். மாநகரசபை அலுவலகம் மீண்டும் நேற்று முதல் நல்லூரில் - பழைய இடத்திலேயே இயங்கத் தொடங்கியுள்ளது.

பெரும்பாலான ஊழியர்களின் வரவை அடுத்து மாநகரசபையின் சகல பிரிவுகளும் சுமுகமான முறையில் இயங்கி வருவதாக ஆணையாளர் பொ. பாலசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாத நடுப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின் யாழ். மாநகரசபை அலுவலகம் அடுத்தடுத்து பல தடவைகள் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்கானதும் -

தொடர்ந்து - அதன் சில பிரிவுகள் நல்லூர் இந்து விடுதியில் இயங்கி வந்ததும் தெரிந்தவையே. (ஒ-5)

## ஜீ. சி. ஈ. (சா/த) பரீட்சை; விண்ணப்ப திகதி நீடிப்பு

ஜீ. சி. ஈ. [சாதாரண தரப்] பரீட்சைக்கான விண்ணப்பங்களை அனுப்பும் திகதி எதிர்வரும் 9 ஆம் திகதி [ஞாயிறு] வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுவரை விண்ணப்பிக்காத பாடசாலைகளும், தனியார் பரீட்சார்த்திகளும் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். [ஒ-3]

## கப்பல் வசதியின்மையால் உரம் தருவிப்பதில் கஷ்டம்

யாழ்ப்பாணம், டிச. 6

அரசாங்கம் வடக்கிற்குக் கொண்டு வர அனுமதியளித்துள்ள உர வகைகளையும் போதிய கப்பல் வசதியில்லாததால் யாழ். மாவட்டத்துக்கு கொண்டு வர முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் விவசாய முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போதிய உர வகைகள் இன்றி விவசாயிகள் கஷ்டப்படுவதாகப் புகார் கூறப்படுகிறது.

உணவுப் பொருள்களை ஏற்றிவர தற்சமயம் நான்கு கப்பல்கள் மட்டும் மாறி மாறிப் பயன்படுத்தப்படுகின்றன.

அவற்றின் மூலம் போதிய உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்ட பின்பே, உர வகைகளை அனுப்ப முடியுமென புனர் வாழ்வு அமைச்சு யாழ். செயலக அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளது. [உ-3]

## மாணவர்களுக்கு மாற்று ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 6

**யாழ். மாவட்டத்தில் உள்ள 501 பாடசாலைகளில் சுமார் நூறு பாடசாலைகள் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இயங்க முடியாத நிலையில் உள்ளன.**

**இந்தப் பாடசாலைகளில் பயின்ற மாணவர்களும் இராணுவ நடவடிக்கைகளினால் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த மாணவர்களும், வேறு பாடசாலைகளில் கல்வி பயில மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.**

கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இத் தகவல்களைத் தெரிவித்தார்.

வலி. வடக்கில் மூடப்பட்டுள்ள 52 பாடசாலை மாணவர்களும் —

தீவுப் பகுதியில் காரைநகரைச் சேர்ந்த வியாவில், பாலாவோடை, மற்றும் மண்டைதீவு, மண்கும்பான், ஊர்காவற்றுறை பகுதிகளில் இயங்காத பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் —

வேறு பாடசாலைகளில் கல்வி பயில ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக அவர் சொன்னார். [உ-3]

## திருக்கோவிலில் கண்ணிவெடி; கவசவாகனம் முற்றாக சேதம்

யாழ்ப்பாணம், டிச. 6

அம்பாறை மாவட்டம் திருக்கோவிலில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் படையினரின் கவச வாகனம் முற்றாகச் சேதமுற்றது.

படையினருக்கு ஏற்பட்ட உயிர்ச் சேதம் குறித்து விவரம் ஏதும் கிடைக்கவில்லை.

நேற்று முன்தினம் காலை 7-30 மணியளவில் திருக்கோவில் இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீதே வாக்கு சார் வீதியில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். [உ]

## சர்வசன வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, டிச. 6

வடக்கு. கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைப்பதா என்பது தொடர்பான சர்வசன வாக்கெடுப்பை 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் திகதிவரை தள்ளிப் போடும் பிரகடனம் ஒன்றில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்றுக் கையெழுத்திட்டதாக அறிவிக்கப்பட்டது.

முன்னர் சர்வசன வாக்கெடுப்பு ஜனவரி 19 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. (உ)

## அம்பாறைத் தாக்குதலில் புலிகள் மீட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், டிச. 6

அம்பாறை- பாணமை வீதியில் பொலீஸ் கொமாண்டோக்கள் ஏழுபேர் கொல்லப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. அது வருமாறு:-

★ ஜி.3 எல். எம். ஜி-1, அதற்கான மகஸீன்-6

★ கோல் கொமாண்டோ -3, மகஸீன் - 11

★ எஸ். எல். ஆர்- 1, மகஸீன்-1

★ தொலைத் தொடர்புக் கருவி-1

★ நேட்டோ ரக ரவைகள்-140

★ 5.56 ரக ரவைகள்-300

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது சுனில் [சின்னத்தம்பி அருமைநாயகம்- அக்கரைப்பற்று], ராஜர் [சேனைக்குடியிருப்பு] ஆகிய இரு போராளிகளும் வீரமரணமடைந்தனர். [உ]

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, டிச. 6

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களில் அமுலில் இருந்து வந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு விட்டதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. [உ-எ]

## 6ஆம் ஆண்டுக்கு அனுமதிப் பரீட்சை மாகாண அமைச்சே தீர்மானிக்கும்

### தேசிய கல்லூரிகளுக்கு மட்டும் வேறு ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், டிச, 6

தேசிய கல்லூரி அல்லாத பாடசாலைகளில் ஆண்டு ஆறு வகுப்பில் புலமைப் பரிசில் [ஐந்தாம் ஆண்டு] பெற்ற மாணவர்களைச் சேர்த்துக் கொண்ட பின்னர், எஞ்சிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு பாடசாலை மட்டத்தில் அனுமதிப் பரீட்சை நடத்துவதா என்பதை மாகாணக் கல்வி அமைச்சே தீர்மானிக்கும்.

தேசியக் கல்லூரிகளைப் பொறுத்தவரை ஆண்டு ஆறு வகுப்பில் குறைந்தது 50 வீதத்தை ஆண்டு ஐந்து வகுப்புப் புலமைப் பரிசிலில் சித்தி எய்தியவர்களுக்கு வழங்க வேண்டும்.

எஞ்சிய இடத்தை நிரப்புவதற்கு அனுமதிப் பரீட்சை ஒன்றை அக்கல்லூரிகள், கல்வி உயர் கல்வி அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் நடத்த வேண்டும்.

தேசியக் கல்லூரி அல்லாத பாடசாலைகளில் ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கு மாணவர் அனுமதி பின்வரும் வகையில் நிரப்பப்படும்.

[அ] இடமாற்றலாகி பாடசாலைச் சூழலில் வசிப்பதற்கு வரும் அரச ஊழியர்களின் பிள்ளைகள்.

[ஆ] பாடசாலைச் சூழலிற்கு தமது நிரந்தர வதிவிடத்தை உண்மையாகவே மாற்றிக் கொண்டவர்களின் பிள்ளைகள்.

— இவ்வாறு கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் அனுப்பியுள்ள சுற்று நிருபம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[5 ஆம் பக்கத்தில் மற்றொரு செய்தி] (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Box கிற்றார் மழைக் கோட் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- தில்லைஅம்பலம் 4 பழம் றோட், யாழ்ப்பாணம். [15032]

### தவறிவிட்டது

மரியாம்பிள்ளை கென்றிக்ஸ் 713121932 V இல. அடையாள அட்டையும் பாடசாலை அடையாள அட்டையும் 03-12-90 திருநெல்வேலிக்கும் அராலித் துறைக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் 168, திருநெல்வேலி கொலனி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (15041)

இல. 16, கஸ்தூரியார் ஒழுங்கையைச் சேர்ந்த நாகலிங்கம் இந்திரகுமார் என்பவரின் 672290619 V அடையாள அட்டை சென்ற மாதம் நாவற்குழி – கேரதீவிற்கு இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். [15036]

தவராசா ரவச்சந்தரன் மாவிட்டபுரம் என்பவருடைய 653132263 V இலக்கமுள்ள அடையாள அட்டையும், ரூபா 500 உம் கொண்ட பேர்ஸ் காக்கைதீவுத் துறை முகத்தில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் சங்கானை, சிவப்பிரகாசம் மகா வித்தியாலயத்தில் ஒப்படைக்கவும். [15045]

### போட்டோஸ்ரட்

மீண்டும் யாழ்நகரில் தரமான போட்டோஸ்ரற் றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் காலை 9.00 மணி – 2.00 மணி வரை ஸ்கைவென்ஸ் 281 B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [ஏஜென்சி தபால் கந்தோர் அருகாமை] [சி-5487]

### டவர் வோச் வேக்ஸ்
### Tower watch works

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் இல:-11, யூபிலி பஜார் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதுடன் திருத்துவதற்கென ஒப்படைத்த கடிகாரங்களை 15 ஆம் திகதிக்குள் பெற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம். சகலவித கடிகார பற்றறிகளும், உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. (14783)

### தட்டெழுத்து நூல்கள்

மிகவும் தேர்ச்சி பெற்றவரால் ஆக்கப்பட்ட தமிழ்/ஆங்கில தட்டெழுத்து மற்றும் வேகப் பயிற்சி நூல்கள் விற்பனை ஆகிறது S.T.C.A 149 (37), சிவன் பண்ணை வீதி (ஈழநாடு நிறுவனத்தின் பின்வீதி), யாழ்ப்பாணம். (15003)

### கம்பியூட்டர் வகுப்பு

Computer Programming-Basic Language-வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம்:- 9-12-90 அனைவரும் சேரலாம் நேரில் வரவும் Jaffna Central Academy, உரும்பராய் சந்தி, உரும்பராய். [15014]

### மில்க்வைற்

திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவைப் பாடல் புத்தகங்களை 10 மில்க்வைற் நீல சோப் மேலுறைகள், அல்லது 10 மில்க்வைற் சலவைப் பவுடர் சிறிய வெற்றுப் பைக்கற் அனுப்பி, அல்லது நேரில் கொடுத்துப் பெற்றுக் கொள்ளவும். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/5496)

### PERSONAL CLASSES

கணிதம் ஆசிரியர் திரு. ஜீவன் G.C.E (O/L) துரித மீட்டலும் வினா விடையும், மற்றும் ஆண்டு 6—11 வரை ஆரம்பம் 7-12-90 இல 400, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (15029]

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், கொப்பிகள் சஞ்சிகைகள் பத்திரிகைகள் சில்லறைக் கடைகள், ஹொட்டல்களுக்குரிய, பேப்பர் வகைகள் வாங்கப்படும் விற்கப்படும். Senathirajah Second Hand Book House 13 ஸ்ரான்லி வீதி (மரசொலி இலங்கைவங்கிக்கு முன்லேன்) யாழ்ப்பணம். (14972)

## இன்வேட்டர் (INVERTOR) தேவை

12 V D/C சார் பற்றறியில் இயங்கும் (Invertor) உடன் தேவை. 50 Watts அல்லது 100 Watts Out put உள்ளது விரும்பத்தக்கது. விவரங்களுடன் முகாமையாளரை தொடர்பு கொள்ளவும்.

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இடமாற்றம்

## ★ அரஸ் ஜவுளியகம் ★

மீண்டும் பழைய இடமான

### 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

எனுமிடத்தில் இயங்குகிறது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (15043)

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI

## சகல மாணவர்களுக்கும் முக்கிய அறிவித்தல்

சகல பயிற்சி நெறிகளுக்குமான வகுப்புக்கள் டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகின்றன.

தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்பட்ட சகல பரீட்சைகளும் 02-01-1991 தொடக்கம் மீண்டும் நடைபெறும்.

மாணவர்கள் அனைவரும் கல்லூரிக்கு சமுகம் தந்து தங்கள் பயிற்சிகளை தொடருமாறு வேண்டப்படுகின்றனர்.

**- பணிப்பாளர்.**
(சி-5494)

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
26 - 10 - 1965

அரக்கர் பிடியில்
17 - 12 - 1989

திதி:
06 - 12 - 1990

அமரர் செல்வன்

### ஐயாத்துரை பாஸ்கரன் (ரஞ்சன்)

[பொற்பதி றோட் சைக்கிள் கடை உரிமையாளர்]

ஆண்டொன்று போனாலும் ஆறுமோ எங்கள் மனம்
பதவி வெறி பிடித்த துரோகிகள் அப்பாவியான
உம்மை படுகொலை செய்து விட்டார்களே
உம் ஆன்மா, சாந்தி பெற
இறைவனை வேண்டி நிற்கிறோம்.

உம் பிரிவால் வாடும்:
அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

சாயி துர்க்கா தேவி லேன்
கொக்குவில் கிழக்கு. [15046]

# பதவி விலகுவதாக எர்ஷார்த் அறிவிப்பு

டாக்கா, டிச. 6

உடனடியாகப் பதவி விலகுவதாக பங்களாதேஷ் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் செவ்வாய் இரவு அறிவித்தார்.

எதிர்க்கட்சிகள் தற்காலிக உப ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்காக பங்களாதேஷ் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை நடத்தப்படும் என்றும் ஜெனரல் எர்ஷாத் டெலிவிஷன் உரையில் தெரிவித்தார்.

எர்ஷாத் உடனே பதவி விலக வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் காலவரையறையற்ற வேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பித்த முதல் தினமே ஜெனரல் எர்ஷாத் தான் உடனே பதவி விலகுவதாக அறிவித்தார்.

ஊரடங்கு உத்தரவையும் மீறி … ணக்கான மக்கள் தலைநகர் டாக்காவில் பேரணியும் நடத்தினர்.

உடனே பதவி விலகுவதாக ஜெனரல் எர்ஷாத் அறிவித்ததைத் தொடர்ந்து டாக்கா மற்றும் முக்கிய நகரங்களில் மக்கள் பட்டாஸ் கொளுத்தி வெற்றிவிழா கொண்டாடினர்.

மக்களின் ஒற்றுமைக்குக் கிடைத்த வெற்றி இது என்று எதிர்க்கட்சிகள் கூட்டணி வர்ணித்தது.

பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு 15 தினங்கள் முன்பதாக பதவி விலகுவதாக முன்னர் ஜெனரல் எர்ஷாத் அறிவித்ததை எதிர்க்கட்சிகள் ஏற்க மறுத்ததும் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வற்புறுத்தியதும் தெரிந்ததே. [இ-ன]

## அறிவித்தல்

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

3-12-90 இல் எடுத்த தீர்மானத்தின்படி சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டு இருப்பதால் அத்தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. தீர்மானத்தை மீறுவோர் மீது சங்கத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

காரியதரிசி

[15044]

## Computer Programming Basic Language

**Commencement:- 12 - 12 - 90 — 9.00 a.m.**

Time Table

**Mondays / Wednesdays** | 9.00 — 11.00

Lectures By members of the Institute of Data Processing Management (London)

### School of Business Administration
(Leaders in Computer Education)
**16, 3rd Cross Street, Jaffna.**
[C-5497]

## நன்றி நவிலல்

தோற்றம்: 1920 - 03 - 18



மறைவு: 1990 - 11 - 06

### கிருஷ்ணர் நாகபூஷணி

அன்புத் தாய் எம் அமரத்துவம் அடைந்த அன்று அன்னாரின் ஈமக்கிரியைகளிலும், இறுதி யாத்திரையிலும் பங்குபற்றியோர்களுக்கும், அனுதாபச்செய்தி வழங்கியோர்களுக்கும், இன்று அந்தியேட்டிக் கிரியைகளிலும் நன்று வந்து பங்குபற்றியோர்களுக்கும் எங்கள் நன்றி கோடி உரித்தாகுக!

சணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நாகபூஷணி இல்லம்,
வட்டுகிழக்கு,
சித்தன்கேணி [15049]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் நெற்செய்கை

# பாதிப்புறும் ஆபத்து

## நோய் ஏற்படலாம் என எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவி வரும் மப்பும் மந்தாரமுமான கால நிலை காரணமாக நெற்செய்கை பாதிக்கப்படக் கூடிய ஆபத்து உருவாகலாம் என எச்சரிக்கப்படுகிறது.

தற்போதைய காலநிலையால் நெற்பயிர்களை தாக்கக் கூடிய "இலை சுருட்டிப் புழு"க்களின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்று விவசாய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே இம்முறை அதிகப் பணச் செலவுடன் நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் உடனடியாக நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலை சுருட்டிப் புழுக்களின் நோயின் விளைவுகள், அறிகுறிகள், அதனைத் தடுக்கும் வழி முறைகள் குறித்து விவரங்களை கோண்டாவில் சந்திக்கண்மையில், பலாலி வீதியில் அமைந்துள்ள விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ-6]

ஒய்வுபெறும் சலுகையைப் பயன்படுத்தி

## செயலகத்தில் 46 பேர் விண்ணப்பம் சமர்ப்பித்தனர்

நவாலி, டிச. 5

ஒய்வுபெறும் சலுகையைப் பயன்படுத்தி யாழ். செயலகத்தில் கடந்த மாத இறுதி வரை 46 பேர் விண்ணப்பங்களை கையளித்தனர்.

எழுதுவினைஞர்கள், உயரதிகாரிகள், கிராமசேவகர்கள் ஆகியோர் இதில் அடங்குவர்.

ஒய்வுபெறுவதற்கான விண்ணப்பங்களைக் கையளிக்கும் திகதி எதிர்வரும் ஜனவரி மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளபோதும் இது வரை இதற்கான சுற்று நிருபம் யாழ். செயலகத்துக்கு வந்து சேரவில்லை என்று கூறப்படுகிறது.

[இ-100]

## ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 6

வடமாராட்சிக் கோட்டத்தில் நடைபெற இருந்த ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் எதிர்வரும் 10-ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

இதற்கான ஒழுங்குகளை வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் மேற்கொண்டுள்ளார்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் வட இந்து மகளிர் கல்லூரிகளிலும் ஆங்கில ஆசிரியர்கள் நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திலும் சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்

(இ)

## தீவுப்பகுதி அகதிகளுக்கு குடிசைகள்

குருநகர், டிச. 6

முப்பத்தாறாயிரம் ரூபா செலவில் அகதிகள் தங்குவதற்கான குடிசைகளை யாழ். மறை வட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் அமைத்து வருகிறது.

ஊர்காவற்றுறை, நாரந்தனை, கரம்பன் பகுதிகளில் இருந்து சுருவிலுக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ள அகதிகள் தற்காலிகமாக தங்குவதற்காக இக்குடிசைகள் அமைக்கப்படுவதாக நடுநிலைய இயக்குநர் வண. எம். ஈ. பயஸ் அடிகள் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறைப் பங்குத் தந்தை வண. எஸ். எப். கிருபானந்தன் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே குடிசைகளை அமைப்பதற்கு திருச்சபை நிதியில் இருந்து 36ஆயிரம் ரூபா வழங்கப் பட்டுள்ளது.

(இ-51)

## ஆரோக்கிய அன்னை திருவிழா

யாழ்ப்பாணம், டிச. 6

அஞ்சனந்தாழ்வு ஆரோக்கிய அன்னையின் திருவிழா எதிர்வரும் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் கொண்டாடப்பட இருக்கிறது. 7ஆம், 8 ஆம் திகதிகளில் மாலை 4.30 மணிக்கும் 9 ம் திகதி காலை 7.30 மணிக்கும் ஆராதனைகள் இடம்பெறும்.


## விசேட அறிவித்தல்

B. A. G. A. Q. 1st in Comm.

பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள்

மீண்டும் ஆரம்பம்: 8 - 12 - 90

எமது நிறுவனத்தில் கல்வி பயின்ற மாணவர்களும் பரீட்சை முடிவுகள் கிடைத்த மாணவர்களும் தவறாது சமூகம் தரவும்

ASTAN INSTITUTE

101/10, Stanly Road, Jaffna.

(C/5480)

## குமாரன் ருறிஸ்ட் இன்

மீண்டும் பழைய இடத்திலேயே குமாரன் ருறிஸ்ட் இன் இயங்கத் தொடங்கி உள்ளது. 24 மணி நேர சேவையுடன் பாதுகாப்பான சூழலில் குறைந்த செலவில் நிறைந்த வசதியுடன் தங்கலாம், 24 மணி நேரம் தங்க ஒருவருக்கு ரூபா 50/- மட்டுமே.

67, Stanley Road,
Jaffna.

[15039]

உ

## ஆத்ம சாந்திக்கிரியை அழைப்பு

கார்த்திகை மாதம் பதினோராம் நாள் செவ்வாய்க்கிழமை [27-11-1990] மாலை அமரத்துவமடைந்த எமது இல்லற ஜோதி

### ஸ்ரீமதி வரதராஜக்குருக்கள் ஞானம்பிகைஅம்மா

அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன

★ கார்த்திகை மாதம் 20ஆம் நாள் [06 12-1990] வியாழன் — தசாகம்
★ கார்த்திகை மாதம் 21ஆம் நாள் [07-12-1990] வெள்ளி — மாசியம்
★ கார்த்திகை மாதம் 22ஆம் நாள் [08-12-1990] சனி — சபிண்டிகரணம்
★ கார்த்திகை மாதம் 23ஆம் நாள் [09-12-1990] ஞாயிறு — கிருகயக்ஞம்

மேற்படி கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தங்களுக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குடியிருப்பு,
சுழிபுரம்.

இவ்வண்ணம்,
சிவஸ்ரீ சி. வரதராஜக்குருக்கள், பிள்ளைகள்.

[15040]

★ உங்கள் ஆவணங்கள் அறிக்கைகளை

### றோணியோ பிரதி

செய்ய வேண்டுமா?

★ தரமான, தெளிவான பிரதிகளை உடனுக்குடன் பெறுவதற்கு இன்றே நாடுங்கள்!

அச்சுப் பதிவு வேலைகள் தடைப்பட்டுள்ள இவ்வேளையில் அதற்குச் சமமான மாற்றீடாக

றோணியோ பிரதி எடுங்கள்!

### அருண் மார்க்கட்டிங் அன் சேவிஸஸ்

[ஷப்றாவுக்கு அருகாமையில்]

15, 2 ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## Patrician Institutes

### தொழினுட்ப பயிற்சி நெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. Computer Processing Courses.

I Computer Programming in Basic Language and Disk Operating System.
Duration - 3 months

II Word Processing (word star 2000 - 4000);
Duration - 3 months

III Lotus 123 / Spread Sheet Analysis.
Duration - 3 months

Commencing:- 10-12-1990

Lecturers:- Mr. S. R. Logendra, D. C. A (Systems Analyst)
and
Miss. M. Varatharajah, Management Accountant Passed Finalist C. I. M. A (Lon.)

Equipment Used:- LASER XT/2, XT/3, 386 (IBM Compatibles) and Apple II Computers.

பின்வரும் பயிற்சி நெறிகளும் எதிர்வரும் 10-12-90 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

2. City and Guilds of (London Institute) Quantity Surveying. - (6 months)
3. Diploma Course in Draughtsmanship. - (6 months)
4. Electrical Wiring.
மின்சார இணைப்பு (3 மாத கால பயிற்சி)
5. Short hand and Typing.
தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் (6 மாத கால பயிற்சி)
6. Motor mechanism.
மோட்டார் மெக்கானிசம் (6 மாத கால பயிற்சி)
7. Motor winding.
மோட்டார் வைன்டிங் (4 மாத கால பயிற்சி)
8. Arc welding.
மின் ஒட்டு வேலை (3 மாத கால பயிற்சி)
9. Lathe Operation.
கடைச்சல் இயந்திர இயக்கம் (3 மாத கால பயிற்சி)

★ மேற்படி பயிற்சி நெறிகளில் பயில விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, உடன் பதிவு செய்துகொள்ளவும்

★ விண்ணப்ப முடிவு திகதி 8-12 90.

★ கட்டணங்கள் தவணை அடிப்படையில் செலுத்தலாம்.

★ கலவரங்களால் பாதிக்கப்பட்ட அல்லது முழுக் கட்டணமும் செலுத்த இயலாதவர்களுக்கு பங்கு குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பேரில் அவர்களுக்கு சலுகை கட்டண வசதி செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

பதிவாளர்,
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Registrar,
Patrician Institute of Higher Studies,
59, St.Patrick's Road,
JAFFNA.

சி/5493


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதாதேவி ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், டிச. 6
அன்னை ஸ்ரீ சாரதாதேவி யாரின் 138ஆவது ஜெயந்தி விழா எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியில் உள்ள இராமகிருஷ்ணாலயத்தில் இடம் பெறும்.


(இ-5)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:-
10-6-1914

மறைவு:-
26-11-1980

திதி:-
06-12-1990



### கந்தையா நடராஜ (பொன்னுத்துரை)

(பிரபல அரசாங்க கட்டட ஒப்பந்தகாரரும், நடராஜா அன் சன்ஸ் உரிமையாளரும்)

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்
மருமக்கள் பேரப்பிள்ளைகள்

112, 1 ஆம் குறுக்குவீதி
வவுனியா. [15038]

## செஞ்சிலுவை ஏற்பாட்டில் ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், டிச. 6
சமகால நிகழ்வுகளை காட்டும் சிறப்ப ஓவியக் கண்காட்சி ஒன்றை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடத்த உள்ளது.

கண்காட்சியில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த படைப்புகள் 1991 ஏப்ரலில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள உலக சுகாதார தின கண்காட்சியிலும் போட்டியிலும் இடம் பெற வாய்ப்பு உண்டு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இந்து மயானம் திருத்தப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 6
வேம்பிராய் இந்து மயானம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேசசபை, சரசாலை மட்டுவில் உப அலுவலக பொறுப்பதிகாரி திரு சர்வேஸ்வரன் மேற்பார்வையில் மட்டுவில் வடக்கு வில்சன் சனசமூக நிலைய நிர்வாகிகள் மற்றும் அங்கத்தவர்கள் இச்சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

(இ-15)


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

**G. A. Q., B. A., 90, 91**

விரிவுரைகள் மீண்டும்


**08 - 12 - 90**

ஆரம்பமாகின்றன என்பதனை எமது நிலைய மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

SPOKEN ENGLISH வகுப்புக்களும் ஆரம்பமாகின்றது.

(சி/5492) நிர்வாகி


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### உயர்திரு ... சபா பரஞ்சோதி

அவர்கள்

தோற்ற
01.0...43

மறைவு
17.11.1989

திதி: 06 12.1990

எங்கள் குடும்பத் தலைவர் இறைபதம் எய்திய முதலாமாண்டு பூர்த்தியில் போது அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வரசித்தி விநாயகரின் திருவருளை வேண்டுகின்றோம்.

அன்பு அம்மா, மனைவி, மக்கள்,
மருமகன் - உறவினர்.

புங்குடுதீவு-1 [15024]

## வலி. வடக்குப் பிரதேசசபை - காங்கேசன்துறை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள் குத்தகை

# கேள்வி அழைத்தல் - 1991

01 - 01 - 1991 தொடக்கம் 31 - 12 - 1991 வரையிலான காலப்பகுதிக்குள் காங்கேசன்துறை, தெல்லிப்பழை, மயிலிட்டி, மல்லாகம், ஆகிய உப அலுவலகங்களின் எல்லைக்குள் இருக்கும் இறைச்சிக் கடைகள், சந்தைகள், சந்தைக் கடைகள் ஆகியவற்றை குத்தகைக்கு எடுத்து நடத்துவதற்கான கேள்விகள் 15 - 12 - 1990 ஆம் திகதி காலை 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கும் மேற்படி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிப்பிட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரப் பணத்தையும் 14 - 12 - 1990 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| உப அலுவலகம் | | ஏற்றுக் கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|---|
| **காங்கேசன்துறை உப அலுவலகம்** | | | | |
| 1. காங்கேசன்துறை, மரக்கறி, மீன் சந்தை | ரூபா: | 35,500/- | 250/- | 50/- |
| 2. காங்கேசன்துறை, மாட்டிறைச்சிக் கடை | ரூபா: | 80,500/- | 250/- | 50/- |
| 3. மயிலிட்டி மாட்டிறைச்சிக் கடை | ரூபா: | 57,000/- | 100/- | 50/- |
| 4. காங்கேசன்துறை சந்தைக் கடை இல: 3, 4 மாத வாடகை | ரூபா: | 40/- | 50/- | 25/- |
| **மயிலிட்டி உப அலுவலகம்** | | | | |
| 1. வீமன்காமம் மீன், மரக்கறிச் சந்தை | ரூபா: | 34,000/- | 250/- | 50/- |
| 2. பலாலிச் சந்தை | ரூபா: | 30.200/- | 250/- | 50/- |
| 3. வீமன்காமம் ஆட்டிறைச்சிக் கடை | ரூபா: | 12,600/- | 100/- | 25/- |
| 4. பலாலி மாட்டிறைச்சிக் கடை | ரூபா: | 36,000/- | 100/- | 25/- |
| **தெல்லிப்பழை உப அலுவலகம்** | | | | |
| 1. கூத்தன் சீமா சந்தை | ரூபா: | 500/- | 50/- | 25/- |
| 2. குழமங்கால மாட்டிறைச்சிக் கடை | ரூபா: | 8,800/- | 100/- | 25/- |
| 3. தெல்லிப்பழை கட்டுவன் வீதி மாட்டிறைச்சிக் கடை | ரூபா: | 45,000/- | 100/- | 25/- |
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 1. மல்லாகம் சந்தை | ரூபா: | 12,000/- | 250/- | 50/- |
| 2. அளவெட்டிச் சந்தை | ரூபா: | 13,005/- | 100/- | 50/- |
| 3. ஆட்டிறைச்சிக் கடை | ரூபா: | 6,000/- | 100/- | 25/- |
| 4. மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை | ரூபா: | 20,200/- | 100/- | 25/- |

வை. இராசையா
விசேட ஆணையாளர்.

வலிகாமம் வடக்குப் பிரதேச சபை,
காங்கேசன்துறை. 30 - 11 - 1990

குறிப்பு: மயிலிட்டி மாட்டிறைச்சிக் கடை, கட்டுவன் தெற்கு மாட்டிறைச்சிக் கடை, குழமங்கால் மாட்டிறைச்சிக் கடை, கட்டுவன் தெல்லிப்பழை மாட்டிறைச்சிக் கடை, அளவெட்டிச் சந்தை ஆகியவற்றைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சுகாதார விதிமுறைகளுக்கமைய தமது சொந்தச் செலவில் தாமே வியாபாரத் தலத்தை அமைத்தல் வேண்டும். கடைகளுக்கான வைப்புப்பணம் சம்பந்தமான விபரத்தை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

[சி/5489]

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி



### திரு நாகலிங்கம் கனகரத்தினம்

[முன்னாள் கல்வித் திணைக்கள பதிவேட்டுப் பொறுப்பாளர்]

தாய் மடியில்:
05-10-1927

தலைவன் அடியில்:
06-11-1990

எங்கள் அன்புத் தெய்வமே எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி, மீளாத் துயில் கொண்டீர்களே. உங்கள் அருமை முகத்தை எம்மால் இனிக் காண முடியாதப்பா. நீங்கள் மண்ணுலகத்தை விட்டு விண்ணுலகு எய்தி 31 நாட்கள் சென்றுவிட்டன. 31 நாட்கள் அல்ல 31 ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டு அகலாதப்பா. உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

31, சின்னாலங்கண்டு லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம். [14679]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உணர வேண்டியது ஒன்று உண்டு

கடந்த ஆறு மாதங்களில், இராணுவத் தாக்குதல்களால், யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 13,600 வீடுகள் உடைந்து நாசமாகி உள்ளன. அவற்றைவிட ஆலயங்கள், பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள் என்று சேதமடைந்த கட்டடங்களின் எண்ணிக்கை பதினையாயிரத்தையும் தாண்டி இருக்கிறது.

வடக்கின் ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய நான்கு பிரதேசங்களிலும் அதே அளவு கட்டடங்கள் – அதாவது பதினையாயிரத்துக்கும் குறையாத எண்ணிக்கையில்– சேதமடைந்திருக்கும் என்று கணக்குப் பார்க்காமலே கூறலாம்.

இதே போல, கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும், இராணுவத் தாக்குதல்களால் சேதமடைந்த கட்டடங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக இருக்கும் என்று உத்தேசமாக மதிப்பிடலாம். ஏனெனில், அங்கு பல தமிழ்க் கிராமங்கள் பூண்டோடு அழிக்கப்பட்டுத் தமிழ் மக்கள் விரட்டி அடிக்கப்பட்டிருக்கிறார்கள். அகதிகளாகக் காட்டுக்குத் துரத்தப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த ஆறு மாதங்கள் நடந்த யுத்தத்தில் அரச படைகள் போராளிகளுடன் போராடவில்லை. தமிழ் மக்களை இன அழிப்புச் செய்வதிலும், அவர்களின் உடைமைகளை நாசம் செய்வதிலும், தமிழ் மண்ணைத் துவம்சம் செய்து சீரழிப்பதிலுமே ஈடுபட்டன என்பதற்கு இந்தப் புள்ளி விவரம் ஒரு சிறு உதாரணம். இரண்டு மாகாணங்களில் நடந்த சிவில் யுத்தத்தில் அரை லட்சத்துக்கும் அதிகமான கட்டடங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன என்றால் இராணுவத்தின் கொடூரத்தின் ஆழம் தெரிகிறதல்லவா?

ஒரு வீட்டை அல்லது கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு, ஒருவன் தனது வாழ்க்கையின் முழுச் சேமிப்பையும் செலவிட்டாலும் போதாது. கட்டடப் பொருள்களின் விலைகளைக் கேட்டால் மயக்கம் போடும் அளவுக்கு, வீடு கட்டும் தேவை மக்களின் சக்திக்கு அப்பாற்பட்டுத் தூரப்போய் எட்ட நிற்கிறது.

இந்த நிலையில், தமிழ்ப் பகுதிகளில் நாசமாக்கப்பட்ட லட்சம் வீடுகளையும் கட்டடங்களையும் மக்கள் தமது சொந்தத்தில் கட்டி எழுப்புவதென்றால் ஒரு நூற்றாண்டே செல்லலாம். தெற்கிலும் மேற்கிலும் வீடுகளையும், கட்டடங்களையும் நிர்மாணித்துக் கொடுக்கும் அரசாங்கம் வடக்கு - கிழக்கில் அவற்றை உடைத்து வருகிறது. ஏன்? தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பட்டுமன்றி அடிப்படை வசதிகளையும் பறித்துவிட வேண்டும் என்பதற்காக.

இதிலிருந்து, உலகம் ஒன்றை வெகு இலகுவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கையின் தமிழ்ப் பகுதிகளை - ஈழப் பிரதேசத்தை - தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாகவோ, அங்கு வாழும் மக்களைத் தனது மக்களாகவோ அரசு கருதவில்லை. ஆகையால் ஈழப் பிரதேசம் தனியாக இயங்க வேண்டும் என்பதைக் கொழும்பு அரசு தனது நடவடிக்கைகளால் மறைமுகமாகக் காட்டிவருகிறது. அதனை ஒரு அடையாளமாக எடுத்து, தனியரசுக்கான தமிழர் போராட்டத்தை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும்.

# ஆண்டு - 1 வகுப்பு அனுமதி: புதிய நடைமுறை அறிவிப்பு

### பிரதான குடியிருப்பாளரின் பிள்ளைகளுக்கு 40 வீதம்

யாழ்ப்பாணம், டிச. 6

அடுத்த வருடத்தில் [1991 இல்] அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் ஆண்டில் மாணவர்களைச் சேர்ப்பதற்குப் புதிய விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக புதிய சுற்றறிக்கை ஒன்று பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப சுற்றறிக்கையின் பிரகாரம்–

★ பாடசாலை அமைந்துள்ள பகுதியில் வசிக்கும் பிரதான குடியிருப்பாளர்களின் பிள்ளைகள் 40 சதவீதமும்–

★ பாடசாலையில் கல்வி கற்கும் மாணவரின் சகோதரர்கள் 25 சதவீதமும்–

★ பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கு 25 சதவீதமும் —

★ இடமாற்றம் பெற்று வந்த அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு 9 சதவீதமும் —

★ பிரதான குடியிருப்பாளர் அல்லாதவரின் பிள்ளைகளுக்கு ஒரு சதவீதமும்

இடம் ஒதுக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

## ஆங்கில ஆசிரியருக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், டிச. 6

பயிற்சி பெறாத ஆங்கில ஆசிரியருக்கு [பயிலுனர் ஆசிரியர் உட்பட] பயிற்சி அளிப்பதற்கான முன்னோடி வகுப்பு இம்மாதம் 11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடை பெறும்.

பயிற்சி பெறாத சகல ஆங்கில ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர். [இ]

## மொழி உபயோகம் பற்றி சுற்று நிருபம்

நவாலி, டிச 6

அரச திணைக்களங்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பவற்றின் அமுல் தொடர்பாக அலுவலக நடவடிக்கைகளை உடனடியாக கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு சகல அரசாங்க, மாகாண சபையின் செயலாளர்கள், மேலதிகச் செயலாளர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் அனைவரும் கேட்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாகன சுற்று நிருபம் மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது. [இ-100]

# தமிழ் வாக்காளர் எண்ணிக்கை மலையக இடாப்புகளில் குறைப்பு

### தொண்டமானுக்கே இது அதிர்ச்சியாம்!

நுவரெலியா, டிச. 6

நுவரெலியா மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 1988 ஆம் ஆண்டைக் காட்டிலும் தமிழ் வாக்காளர் எண்ணிக்கை குறைந்துள்ளது. திட்டமிட்டு வாக்காளர் எண்ணிக்கை வெட்டப்பட்டுள்ளது. இது அதிர்ச்சி தருவதாகும்.

இதற்குக் காரணம் அதிகாரிகளா? எதிர்க்கட்சியினரா? உண்மை நிலையைக் கண்டறியுமாறு அமைச்சரவையைக் கேட்டுள்ளேன்.

இவ்வாறு கொட்டகலை எதன்சைட் ஆசிரிய பயிற்சி கலாசாலை முத்தமிழ் கலா மன்றம் ஏற்பாடு செய்திருந்த கலைவிழா பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் உல்லாச கிராமிய தொழிற்றுறை அமைச்சருமான திரு எஸ். தொண்டமான் குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

நான் 1978 இல் அரசுடன் சேர்ந்தபோது எனக்கு ஒரு பிரச்னை ஏற்பட்டது. தமிழ் பாடசாலைகளை சிங்களப் பாடசாலைகளுடன் இணைத்து ஒரு தொகுதியாக இயங்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். நான் அரசுக்கு தொடர்ந்து ஆதரவு நல்க முடியுமா எனச் சிந்தித்தேன்.

இன்று பல தனிப் பாடசாலைகளை மலையகத்தில் உருவாக்க முடிந்தது. அது மட்டுமல்ல இன்று தலவாக்கொல்லை போன்ற இடங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

மலையக ஆசிரியர்களிடம் என்ன கேட்பது ஒன்றே ஒன்று தான் அரசியலைப் பாடசாலைக்கு வெளியே வைத்துக் கொள்ளுங்கள்.

எமது சமூகம் வளரவேண்டிய சமூகம் கல்வி வளர்ச்சிதான் நமது சமுதாயத்தை வளர்க்கக்கூடிய ஒரே ஒரு கருவி. அதைத் தவறான வழிகளில் பாவித்து எதிர்கால சந்ததியை கெடுத்து விடாதீர்கள் எனக் கேட்கிறேன் —என்றார்.

இப்பரிசளிப்பு விழாவுக்கு கலாசாலை அதிபர் என். நடராசா தலைமை வகித்தார். (அ-94)

## தொண்டர் ஆசிரியருக்கு போட்டிப் பரீட்சைக்குப் பின்பே நிரந்தர நியமனம் வழங்கப்படும்

கொழும்பு, டிச. 6

தொண்டர் ஆசிரியர்களுக்கு போட்டிப் பரீட்சை நடத்தப்பட்ட பின்னரே நியமனம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி இப்படி முடிவு செய்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொண்டர் ஆசிரியர்களுக்கு அடுத்த மாதம் ஜனவரியில் இருந்து நிரந்தர நியமனம் வழங்க கல்வி அமைச்சு முன்னர் தீர்மானித்து இருந்தது.

அமைச்சரின் புதிய தீர்மானம் காரணமாக ஜனவரியில் நிரந்தர நியமனம் வழங்கும் திட்டம் கைவிடப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## விண்ணப்பப் படிவம் இல்லை

நவாலி, டிச. 6

யாழ். செயலகத்தில் பாஸ்போட் விண்ணப்பப் படிவங்கள் முடிவடைந்து விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

கூடியளவு குடிவரவு குடியகல்வு திணைக்களத்திலிருந்து கடந்த மே மாதம் இரண்டாயிரம் படிவங்கள் யாழ் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. (இ-100)

## நினைவு தினம்

கொக்குவில், டிச. 6

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால், இரசிகமணி கனக செந்திநாதனின் பதின்மூன்றாவது நினைவு தினம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அனுஷ்டிக்கப்பட உள்ளது. [இ-69]

# பிரச்சினைக்குரிய குவைத்: அதன் வரலாறும் வளங்களும்

பாரசீக வளைகுடாவில் மேற்கே அமைந்து உள்ள ஒரு குட்டி நாடு குவைத்.

இதன் மொத்த பரப்பளவோ 17 ஆயிரத்து 818 சதுரகிலோ மீற்றர்கள் தான்.

ஆனால் மக்கள் தொகையோ 15 இலட்சத்திற்கும் அதிகம்.

50 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தை (ஆக்கிரமிப்புக்கு முன்னர்) குவைத் கொண்டிருந்தது. நாடாளுமன்றம் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பிரதம மந்திரியை தேர்ந்தெடுத்து வந்தது. நாடாளுமன்றம் இருந்தும் மன்னருக்கே எல்லா அதிகாரங்களும் இருந்து வந்தன. நாட்டின் தலைவர் 'எமிர்' என்றே அழைக்கப்பட்டு வந்தார். ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டபோது மன்னர் ஷேக் ஜாபர் ஆட்சி நடத்தி வந்தார்.

250 ஆண்டுகளாக இவரது அல்ஷபா குடும்பமே குவைத்தை ஆட்சி செய்து வந்தது.

### முதல் ஆக்கிரமிப்பு

கடந்த நூற்றாண்டில் 1899 ஆம் ஆண்டு குவைத்தை துருக்கி ஆக்கிரமித்துக் கொண்டது.

துருக்கியின் பிடியில்இருந்து குவைத்தை மீட்ட இங்கிலாந்து, 1914 ஆம் ஆண்டு வரை தனது பாதுகாப்பில் வைத்திருந்தது.

பாதுகாப்பை மட்டும் தனது பொறுப்பில் வைத்திருந்தாலும், குவைத் சுதந்திரமாக செயல்படும் நாடு என்று இங்கிலாந்து அப்போது அறிவித்து இருந்தது.

1961 ஆம் ஆண்டுக்கு இங்கிலாந்தின் பாதுகாப்பில் இருந்து விடுபட்டு, பூரண சுதந்திரமான நாடாக குவைத் இயங்க ஆரம்பித்தது.

### இரண்டாவது ஆக்கிரமிப்பு

குவைத்தை ஈராக் ஆக்கிரமிப்புச் செய்ததற்கு எல்லைப் பிரச்சினை தான் முக்கியமான காரணம் என்று கூறப்பட்டாலும், இன்னும் சில காரணங்களும் பின்னால் மறைந்து இருக்கின்றன.

அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி போல பூமிக்கடியில் எண்ணெய் ஆறு ஓடுவது, 1930ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் குவைத் அரசுக்குத் தெரிந்தது. அதற்கு முன்பு வரை கடல் வாழ் உயிரினங்கள் மூலம் பெறப்பட்ட வருவாய்தான் மசகு எண்ணெய்யை குவைத் அரசு உற்பத்தி செய்து வந்தது.

உலகில் உள்ள எண்ணெய் வளத்தில் குவைத்தில் மட்டும் 13 சதவீதம் இருப்பதாகக் கணக்கிடப்பட்டு இருக்கிறது.

1930க்கு முன்புவரை குவைத் மக்கள் மீன்பிடித் தொழிலில் தான் முழுமூச்சுடன் ஈடுபட்டு வந்தனர்.

### தங்கமேடை

எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் குவைத்தின் பொருளாதாரம் வேகமாக முன்னேற்றம் கண்டது.

பெரும்பாலான ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு குவைத் நாடு தான் எண்ணெய்யை விநியோகித்து வந்தது. இதனால் குவைத் இன்று உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாக மாறியது.

இப்படி வளர்ச்சிகண்ட குவைத் மீது ஈராக்கிற்கு நீண்ட நாட்களாக ஒரு கண் இருந்து வந்தது.

### நடுநிலை வலயம்

குவைத்துக்கு அருகே நடுநிலை வலயம் [Neutral Zone] என்ற ஒரு பகுதி உள்ளது. இதை ஈராக்கும் சவூதி அரேபியாவும் பகிர்ந்து கொண்டுள்ளன. இதில் ஆதிக்கம் செலுத்துவது யார் என்ற பிரச்சினை வெகு நாட்களாக இருந்து வருகிறது.

குவைத்திற்கும் இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எல்லைத் தகராறு காரணமாக குவைத் மீதும் ஈராக் மோத ஆரம்பித்தது. இதுதான் போர் முழக்கத்தின் ஆரம்பமாக இருந்தது.

குவைத் ஒவ்வொரு ஆண்டும் பெற்றோல் உற்பத்தியை அதிகரித்து வந்தது, ஈராக்கின் பொருளாதாரத்தையே நசுக்கி விட்டது இதுவரை 50 ஆயிரத்து 400 கோடி ரூபா தனக்கு இதனால் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக ஈராக் குற்றஞ்சாட்டியது.

மேலும் ஈராக்-குவைத் நாடுகளின் 200 மைல் நீள எல்லைப் பகுதியில் உள்ள எண்ணெய்க் கிணறுகளில் இருந்து 9 ஆயிரத்து 640 கோடி ரூபா மதிப்பு உள்ள பெற்றோலை குவைத் திருடி விட்டதாகவும் ஈராக் ஜனாதிபதி சத்தாம் ஹூசேன் கடந்த ஜூலை 17 இல் அறிவித்திருந்தார்.

### மூன்றாவது ஆக்கிரமிப்பு

இந்த எல்லைஎண்ணெய் தகராறு காரணமாகத் தான் கடந்த ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி ஈராக், குவைத்தை ஆக்கிரமித்தது. இது குவைத் மீதான மூன்றாவது ஆக்கிரமிப்பு ஆகும். (ஆ - எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ தாதியர் விரிவுரை விரைவில் ஆரம்பமாகும்

## 12 ஆம் திகதி வருகை தருமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், டிச. 6

மாணவ தாதியர், மாணவ குடும்பநல சேவையாளர்களுக்கான விரிவுரைகள் மீண்டும் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் ஆரம்பமாகவுள்ளன.

சம்பந்தப்பட்ட மாணவ, மாணவியரை எதிர்வரும் 12 ஆம் திகதி தாதியர் பயிற்சிப் பாடசாலையில் சமுகம் தருமாறு யாழ். போதனா ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி புஷ்பா சண்முகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதை அடுத்து விரிவுரைகள் தடைப்பட்டிருந்தன.

[ஓ-15]

# வயோதிபரைக் கடித்த மனிதர்; கடியுண்டவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, டிச. 6

மனிதனை மனிதனே கடித்த சம்பவம் ஒன்று சரசாலை வடக்கில் இடம்பெற்றுள்ளது.

வளவில் மாடு கட்டிக் கொண்டிருந்த போது திடீரென பாய்ந்து வந்த ஒருவர், மற்றவரை பிடித்துக் கடித்தார்.

கடியுண்ட வயோதிபர் அலறித் துடித்துப் பதறிப் போனார்.

பாய்ந்து வந்து கடித்தவர் சித்தசுவாதீனமற்றவர் எனப் பின்னர் தெரியவந்தது.

கடியுண்டவர் சரசாலை வடக்கைச் சேர்ந்த கந்தசாமி [70 வயது]. காதில் கடியுண்ட இவர், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

[ஓ-117]

# பங்களாதேஷ் பதில் ஜனாதிபதி

டாக்கா, டிச. 6

பங்களாதேஷின் பதில் ஜனாதிபதியாக பிரதம நீதியரசரான சகாபுதீன் அஹ்மத்தை எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஏகமனதாக சிபார்சு செய்துள்ளன.

தொடர்ந்து மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களை அடுத்து பதவியை விட்டு விலக ஜனாதிபதி எர்ஷாத் இணங்கினார். அதனையடுத்தே பதில் ஜனாதிபதி நியமனத்துக்கு பிரதம நீதியரசரின் பெயர் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

(முன்னர் வந்த செய்தி 2ஆம் பக்கத்தில்)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ரேணுகா கௌதமி ஜெகநாதன்

(தங்கா)

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஜெகநாதன் [உபதலைவர், இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் - கொழும்பு] அவர்களின் அன்பு மனைவி ரேணுகா கௌதமி 18 - 11 - 1990 அன்று இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் பிரணவன், சுபாஷினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செபரெட்ணம், மாலினி தம்பதிகளின் அன்பு மகளும், கோவிந்தராஜா, கௌரியம்மா தம்பதிகளின் அன்புமருமகளும் ரஞ்சலா காசிநாதனின் அருமைச் சகோதரியுமாவார்.

ஈமக்கிரியைகள் 20-11-1990 அன்று மதுரையில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி சித்தா பொன்னுத்துரை,
கோ. ஜெகதீசன்.
(யாழ். மக்கள் வங்கி)

60/2, யாழ். இந்துக்கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[கி-5499]

## யோர்ஜ் துரைரத்தினம் எவேட்ஸ்

சாவகச்சேரியைச் சேர்ந்த யோர்ஜ் துரைரத்தினம் எவேட்ஸ் [இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர் P.H.I] 5-12-90 அன்று காலமானார். இவர் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், லலித்ததேவகுமாரி [U.S.A]. ஆனந்தராஜன் எவேட்ஸ், சந்திரவதனா [பரியோவான் பாலர் பாடசாலை], நளினி [இலங்கை வங்கி சாவகச்சேரி], காலஞ்சென்ற ரவிராஜன் எவேட்ஸ், சித்திரா ணி [U.K] ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியநாதன் U.S.A], காந்தினி, சந்திரன் முருகேசம்பிள்ளை [வர்த்தக வங்கி யாழ்ப்பாணம்], தேவானந்தன் [யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம்], மோகன் [U.K] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மணிதேவசகாயத்தின் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்கஆராதனை இன்று 6-12-90 வியாழ கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:

திரு. S. தேவானந்தன்

31, சண்டி வீதி.
[பழைய பொலீஸ் நிலையம் முன்பாக]
சாவகச்சேரி.

[14681]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்தியாவுக்கு மீண்டும் வெற்றி

புனே, டிச 6

புனேயில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் இந்தியா, இலங்கையை 6 விக்கட்டுகளால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49 ஓவர்களில் 8 விக்கட்டுகளையும் இழந்து 227 ஓட்டங்களை எடுத்தது.

இந்திய அணி 45.3 ஓவர்களில் 4 விக்கட்டுகள் இழப்புக்கு 230 ஓட்டங்களைப் பெற்று வெற்றி வாகை சூடியது

இலங்கைக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இந்தியா அடைந்த இரண்டாவது வெற்றி இதுவாகும்.

[உ-எ]

# மல்லாகத்தில் வேறு பாடசாலைகள்

யாழ்ப்பாணம், டிச. 6

இன்று வியாழக்கிழமை தொடக்கம் குரும்பசிட்டி பொன் பரமானந்தர் மகா வித்தியாலயம், மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்திலும் —

மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம், மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திலும் தற்காலிகமாக இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[ஓ-6]

# இன்று கருத்தரங்கு

தென்மராட்சி, டிச. 6

தென்மராட்சி கோட்டக் கல்விப் பகுதி பாடசாலைகளின் தமிழ் பாட ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிக் கருத்தரங்கு இன்று காலை பத்துமணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[உ-117]

# ஆசிய கிரிக்கெட் 21 இல் ஆரம்பம்

நான்காவது ஆசிய கிரிக்கெட் போட்டி இம்மாதம் 21 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை புதுடில்லியில நடைபெறும்.

பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

[உ-எ]

# மழையால் அகதிகள் பாதிப்பு

கிழக்கு மாகாணத்தில் அகதி முகாம்களில் உள்ள தமிழர்கள் மழை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு இன்மை காரணமாக அவர்கள் வீடுகளுக்கு திரும்ப மறுக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

[இ-5]

# வாகன அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், டிச. 6

1991 ஆம் ஆண்டுக்கான வாகன அனுமதிப்பத்திரங்கள் எதிர் வரும் ஜனவரி மாதம் முதல் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை கச்சேரி இறைவரித் திணைக்கள அலுவலகத்தில் பெற்று டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது

[இ-5]

# பாரதிதாசனின் நூல்கள் அரசுடைமை

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் நூல்கள் அனைத்தும் தமிழ்நாடு அரசால் நேற்று முதல் அரசுடைமையாக்கப்பட்டன.

அடுத்த ஆண்டு முதல் பாரதிதாசனின் நூல்கள் அனைத்தும் ... தந்தை பெரியாரின் நூல்கள் ... தரப் பிரசுரம் செய்யப்படும் என்று முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று அறிவித்தார்.

[ஓ-எ]

# நாய் பிடிக்கும் வேலையில் யாழ். மாநகரசபை உஷார்!

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கையில் யாழ் மாநகரசபை ஊழியர்கள் நேற்று முழுமுரமாக ஈடுபட்டிருந்தனர்.

நல்லூர், முத்திரைச் சந்தை, கச்சேரிப்பகுதி உட்பட பல இடங்களில் வீதியில் திரிந்த நாய்களே நேற்றுப் பிடிக்கப்பட்டன.

நேற்று மட்டும் ஐம்பதுக்கும் அதிகமான நாய்கள் பிடிக்கப்பட்டதாக மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[ஓ-5]

# சைக்கிளில் சென்றவரை குளவிகள் பல கொட்டின!

## ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில்

வீதி வழியே சைக்கிளில் சென்றவரை குளவிகள் விரட்டிக் கொட்டின.

பனை மரத்தில் இருந்து ஓலை ஒன்று வீதியில் சென்றவர் மீது விழுந்தது. அப்போது ஓலையில் கூடு கட்டியிருந்த குளவிகள் வெளியே பறந்தன.

அவைகளில் சில சைக்கிளில் வந்தவரை மாறி, மாறி அங்கும் இங்கும் கொட்டின.

அவர் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த மு. ஞானசேகரம் [30 வயது] என்பவரே குளவிகளினால் கொட்டப்பட்டவர் ஆவார்.

[ஓ-117]

அயோத்தியில் மீண்டும் பதற்றம்:

# ராமர் ஆலயம் கட்டுவதற்காக 10,000 தொண்டர் குழுமினர்!

புதுடில்லி, டிச. 6

அயோத்தியில் ராமர் ஆலயம் கட்டும் திருப்பணியில் கலந்துகொள்ள சுமார் பத்தாயிரம் விஸ்வ இந்து பரிஷத் தொண்டர்கள் குழுமியிருப்பதாக செய்திகள் தெரிவித்தன.

ஆலய கட்டுமானப் பணியில் கலந்துகொள்ள தினமும் 100 விஸ்வ இந்து பரிஷத் தொண்டர்கள் இன்று (வியாழன்) முதல் பாப்ரி மசூதி பிரதேசத்துக்குள் செல்வர் என்றும் —

பொலீஸார் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தால், தொடர்ந்து தினமும் 100 பேர் அடுத்த மாதம் 14ஆம் திகதி வரை பாப்ரி மசூதிக்குச் சென்று கொண்டிருப்பர் என்றும் விஸ்வ இந்து பரிஷத் அறிவித்துள்ளது

விஸ்வ இந்து பரிஷத் தொண்டர்கள் வன்முறையில் ஈடுபடாது அஹிம்சை வழியில் சத்தியாக்கிரகஇயக்கத்தில் ஈடுபடுவர் என்றும் விஸ்வ இந்து பரிஷத் அறிவித்திருக்கிறது.

இதனிடையில் இந்த சத்தியாக்கிரக இயக்கத்தைக் கைவிடும்படி விஸ்வ இந்து பரிஷத்தை சகல அரசியல் கட்சிகளும் கோரியுள்ளன.

[ஓ-எ]

# வெளிநாட்டில் வசிப்போரின் உறவினரை ஏமாற்றிய நபர்!

தென்மராட்சி பகுதியில் பலரை ஏமாற்றிப் பண மோசடி செய்ததாகச் சொல்லப்படும் நபர் ஒருவர் மட்டுவில் வடக்குப் பகுதி மக்களால் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் வெளிநாடுகளில் உறவினர்கள் இருக்கும் வீடுகளுக்குச் சென்று, வெளிநாட்டிலுள்ள சம்பந்தப்பட்டவர் தம்மிடம் சில பொதிகளைத் தந்ததாகவும்— அத்தப் பொதிகளுக்கு கூடுதலான வரி செலுத்த வேண்டி இருந்ததால், அவற்றைக் கொண்டுவர முடியவில்லை என்றும் கூறி அதற்கான பணத்தை பலரிடம் பெற்றுக் கொண்டதாகவும் தெரிய வருகிறது.

[ஓ-117]

## இராணுவத்துக்கு உதவியாக....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்ப்பதில் ஈடுபட்ட பல தமிழ்க் குழுக்கள் இப்போது தமது நட்பை இடம்மாற்றி உள்ளன.

தனித் தமிழ்நாடு என்ற இலட்சியத்தை இப்போது அவர்கள் துறந்துவிட்டு, ஐக்கிய இலங்கை என்ற கூட்டுக்குள் தீர்ப்புக் காணதயாராகி விட்டார்கள்.

ஒற்று, வேவு பார்க்கும் வேலைகளுக்கும் தகவல் சேகரிப்பதற்கும் இந்த குழுக்களின் செயல்பாடு அரசுக்கு பெருமளவு உதவும் என்பது வெளிப்படை.

— இவ்வாறு அந்த விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு தமிழர்கள் மத்தியில் செல்வாக்குப் பெறாத இந்தக் குழுக்களினால், தமது நடவடிக்கைகள் மூலம் தற்போதைய யுத்தத்தில் பெரிய தொருதாக்கத்தை ஏற்படுத்த முடியுமா என்பது கேள்விக்குறியே- என்று அந்த விமர்சனத்தில் கருத்துக் கூறப்பட்டது,

[உ-5]

## புலிகளை..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிவாகியதாகவும் அந்த அதிகாரி சொன்னார்.

இந்தச் சந்திப்பு நடந்த போதிலும், தமிழக அரசுமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து நேரில் விசாரிப்பதற்காக அமைச்சர் சஹாய் திட்டமிட்டவாறு தமிழகத்துக்குச் செல்வார் என்றும் அறிவிக்கப்பட்டது.

(அ-எ)

# கூட்டுறவாளர் கூட்டம் நாளை

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்க, தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள். பொதுமுகாமையாளர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று நாளை காலை 10 மணிக்கு கோண்டாவில் மாதிரி நிர்வாகச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

[ஓ-5]

# செயலகத்தில் சைக்கிள் களவு

யாழ்ப்பாணம், டிச. 6

யாழ். செயலக சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்டிருந்த பெண்களுக்குரிய புதிய சைக்கிள் ஒன்று காணாமற் போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை எடுத்துச் சென்றவர்கள் பழைய சைக்கிள் ஒன்றை அங்கு விட்டுச்சென்றிருந்தனராம்.

(இ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org